இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 45 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – புரட்டாசி 07 – திங்கள்கிழமை 23 செப்டம்பர் 2024 – கோவை ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 45: Thiruvalluvar Year - 2055 - Purataasi 07 - Monday 23 September 2024 - Kovai ★★ 8 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.9.2024) முகாம் அலுவலகத்தில், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக முதன்மைச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான துரை வைகோ, மனைவியுடன் சென்று சந்தித்து, தனது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

### சென்னை - அண்ணா பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெறுகிறது!

# ‘தமிழ்நாடு அறிவியல் அறிஞர் விருது’ வழங்கும் விழா!

## ‘அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்’ சார்பில் –

## ‘அறிவியலறிஞர் விருதுகள்’ வழங்கி, அமைச்சர் – முனைவர் க.பொன்முடி சிறப்புரை!

**சென்னை, செப். 23 - சென்னை - அண்ணா பல்கலைக் கழகம் - விவேகானந்தா அரங்கில் இன்றைய தினம் (செப். 23), தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம் சார்பில், ‘தமிழ்நாடு அறிவியலறிஞர் விருது’ வழங்கும் விழா நடைபெறுகிறது.**

**இவ்விழாவில் - தமிழ்நாடு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்துகொண்டு, ‘தமிழ்நாடு அறிவியலறிஞர்’ விருது வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்.**

அதன் விபரம் வருமாறு:-

கல்வித்துறையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்ட முத்தான திட்டமாம் “நான் முதல்வன்” திட்டத்தின் வாயிலாக நமது மாணவச் செல்வங்கள் அனைவரும் திறன் மிகுந்தவர்களாக, தமது துறையில் சிறந்தவர்களாக முதல்வர்களாக விளங்க பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் அண்ணா பல்கலைக்கழகம் நுழைவுத்தேர்வு மூலம் சேர்க்கை பெற்று முதுநிலை பட்டப் படிப்பு பயிலும் 600 மாணாக்கர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.6000 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**‘ஆராய்ச்சிப் பூங்கா’ அமைக்க ரூ.63 கோடி!**

ஆராய்ச்சியை ஊக்குவிக்க அண்ணா பல்கலைக்கழகத்தில் ‘ஆராய்ச்சிப் பூங்கா’ அமைக்க ரூ.63 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது மட்டுமின்றி தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைக்காக தலா ரூ.25 இலட்சம் பரிசு வழங்கி நமது முதலமைச்சர் அவர்கள் பாராட்டியது அறிவோம்!

மகளிர் கல்வி மற்றும் மேம்பாட்டினை உறுதி செய்யும் வண்ணம் ‘புதுமைப் பெண்’ திட்டம் - அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு “தமிழ்ப் புதல்வன்” திட்டம் எனத் திட்டங்கள் பல கொணர்ந்தார், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்!

இத்திட்டங்களின் மூலம் அரசுப் பள்ளியில் படித்து உயர்கல்வியில் சேர்க்கை பெறும் மாணவ, மாணவிகளுக்கு மாதம் 1000/- ரூபாயினை முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். இதன் மூலம் தலா மூன்று இலட்சம் மாணவ - மாணவியர் பயனடைந்து வருகின்றனர்.

**நாட்டிலேயே தொடர்ந்து தமிழ்நாடு முதலிடம்!**

இதுமட்டுமில்லாமல் விலையில்லாப் புத்தகம், கட்டணமில்லாப் பேருந்து, முதல் தலைமுறைப் பட்டதாரிக்கு கல்விக் கட்டணச் சலுகை, அரசு பள்ளியில் பயின்ற மாணவர்கள் தொழில் கல்வியில் சேர 7.5% இட ஒதுக்கீடு, அத்துடன் அதில் சேர்க்கை பெறுவோர்க்கு அனைத்துக் கட்டணமும் அரசே வழங்குவது போன்ற பல்வேறு திட்டங்களை கழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இதனால் தமிழ்நாடு, உயர் கல்வியின் மாணவர்கள் சேர்க்கை விகிதம் நாட்டிலேயே தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது.

நமது முதல்வர் அவர்களின் சீரிய முயற்சித் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளின் மூலம் நாம் அனைத்துத் துறைகளிலும் முன்னணியில் இருக்கிறோம். எனின், அது மிகையல்ல!

கல்வித் துறையில் கழக அரசின் அடுக்கடுக்கான திட்டங்கள் போல- ‘தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றம்’ தமிழ்நாட்டின் அறிவியல் தொழில்நுட்ப ஆய்வுகளையும் வளர்ச்சியையும் ஊக்கப்படுத்துகின்றது.

அனைத்துத் துறைகளிலும் தொழில்நுட்ப வளர்ச்சிக்காக இம்மன்றம் செயல்பட்டு வருகிறது. இம்மன்றம் 15க்கும் மேற்பட்ட அறிவியல் திட்டங்களைச் செயலாக்கி வருகிறது.

அவ்வரிசையில், இம்மன்றத்தின் - ‘தமிழ்நாடு அறிவியல் அறிஞர் விருது’ என்னும் திட்டம். நமது மாநிலத்தின் அறிவியல் வளர்ச்சிக்கும், அதன் மூலம் மாநில வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருகிறது.

பல்வேறு துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்ட 43 அறிவியலாளர்கள், ‘தமிழ்நாடு அறிவியலறிஞர்’ விருதைப் பெற இம்மன்றத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

“தமிழ்நாடு அறிவியல் அறிஞர் விருது” எனும் இவ்விருதுகள் வழங்கிடும் விழா, இன்றைய தினம் (23.9.2024 - திங்கள் கிழமை) காலை 11.00 மணி அளவில், சென்னை - அண்ணா பல்கலைக்கழகம் - ‘விவேகானந்தா அரங்கில்’ நடைபெறுகிறது.

இவ்விழாவில் - தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் உறுப்பினர் - செயலர் முனைவர் எஸ்.வின்சென்ட் வரவேற்புரையாற்றுகிறார்.

இவ்விழாவிற்கு - அரசு உயர் கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் தலைமை வகிக்கிறார்.

விழாவில் - தொழில்நுட்பக் கல்வி ஆணையர் டி.ஆபிரகாம், அண்ணா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ஜெ.பிரகாஷ் ஆகியோர் பங்கேற்று உரையாற்றுகின்றனர்.

உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, ‘தமிழ்நாடு அறிவியலறிஞர்’ விருதுகளை 43 பேருக்கு வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் இணைப் பேராசிரியர் வி.ராமசாமி நன்றியுரையாற்றுகிறார்.

### வயநாடு நிலச்சரிவு பேரிடருக்கு - இதுவரை

# ஒன்றிய அரசு நிதி எதுவும் வழங்கவில்லை!

## கேரள முதல்வர் பினராயி விஜயன் குமுறல் - குற்றச்சாட்டு!

**திருவனந்தபுரம், செப். 23 - வயநாடு நிலச்சரிவு பேரிடருக்கு ஒன்றிய அரசு இதுவரை எந்த நிதியும் வழங்கவில்லை என்று கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் குற்றம் சாட்டியுள்ளார்.**

திருவனந்தபுரத்தில் செய்தியாளர்களை சந்தித்த அவர், ஒன்றிய அரசின் விதிமுறைகள்படி, மீட்பு பணிகளுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 219 கோடி ரூபாய் மட்டுமே கிடைக்க வாய்ப்புள்ளதாக கூறினார்.



புதையுண்ட, இடிந்த ஒரு வீட்டுக்கு 1.30 லட்சம் ரூபாய் மட்டுமே ஒன்றிய அரசு வழங்குவதாகவும், ஒரு கிலோ மீட்டர் சாலைக்கு ஒரு லட்சம் ரூபாய், ஒரு பள்ளிக்கு 2 லட்சம் ரூபாய் என்பது தான் ஒன்றிய அரசின் விதிமுறையாக உள்ளது என்று பினராயி விஜயன் தெரிவித்தார்.

ஒன்றிய அரசின் அந்த தொகையில் ஒரு பள்ளிக்கு அடித்தளம் கூட போடமுடியாது என்றும் எனவேதான், வயநாடு பேரிடர் மீட்பு பணிக்கு ஆயிரத்து 200 கோடி ரூபாயும், புனரமைப்பு பணிகளுக்கு 2 ஆயிரத்து 200 கோடி ரூபாய் சிறப்பு நிதியும் வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

ஆனால் ஒன்றிய அரசு இதுவரை எந்த நிதியும் வழங்கவில்லை என்று குற்றம் சாட்டிய கேரள முதலமைச்சர், விமானப் படையினர், ராணுவத்தினர் மேற்கொண்ட நிவாரண பணிகளுக்கும் மாநில அரசு தான் அனைத்து செலவையும் வழங்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டு நிகழ்ந்த கனமழை வெள்ளப் பெருக்கு பேரிடரின் போது மீட்பு பணிக்கு வந்த இந்திய விமானப் படைக்கு 102 கோடி ரூபாய் வழங்கப்பட்டதாகவும், அப்போது ஒன்றிய அரசு வழங்கிய அரிசிக்கு 205 கோடி ரூபாய் மாநில அரசு வழங்கியதாகவும் கூறினார்.

இதேபோன்று, வயநாடு மீட்பு பணிக்கு வந்த விமானப்படை ஹெலிகாப்டர்களுக்கும், ராணுவத்தினரின் அனைத்து செலவுகளுக்கும் மாநில அரசுதான் பணம் வழங்க வேண்டும் என்றும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்தார்.

### நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும்!

# ‘ஒரே நாடு - ஒரே தேர்தல்’ திட்டத்தில் பல்வேறு குறைபாடுகள்!

## முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.ஒய்.குரேஷி அறிக்கை!

*புதுடெல்லி, செப். 23-*

*ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம் குறித்த முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையிலான உயர்நிலைக் குழு அளித்த பரிந்துரைகளுக்கு ஒன்றிய அமைச்சரவை கடந்த புதன்கிழமை ஒப்புதல் அளித்தது.*

*அதன்படி, மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளுக்கு ஒரு கட்டமாகவும், பின்னர் 100 நாள்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடுத்த கட்டமாகவும் தேர்தல் நடத்தப்படும்.*



*இத்திட்டம் நடைமுறைக்கு சாத்தியமற்றது; பா.ஜ.க.வின் மலிவான அரசியல் நாடகம் என்று எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.*

*இந்நிலையில், முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் எஸ்.ஒய். குரேஷி வெளியிட்டுள்ள அறிக்கையில்,*

*ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம் தொடர்பான பரிந்துரைகளில் பல குறைபாடுகள் உள்ளதாகவும், நாடு முழுவதும் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகளை தேர்வு செய்யும் உள்ளாட்சித் தேர்தல் தனியாக நடத்தப்படும் என்ற பரிந்துரையானது, ஒரே நேர தேர்தலின் சாராம்சத்துக்கு முற்றிலும் முரணாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.*

*சில மாதங்களுக்குள் தனித்தனி தேர்தல்களை நடத்துவது, பல்வேறு சவால்களை உருவாக்கும் என்பதோடு வாக்காளர்கள் மத்தியிலும் சோர்வை ஏற்படுத்தும் என்றும் ஒரே நேர தேர்தல் திட்டத்துக்கு தற்போது உள்ளதைவிட மும்மடங்கு அதிக எண்ணிக்கையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு ஒப்புகைச் சீட்டு கருவிகள் தேவை என தேர்தல் ஆணையம் சுட்டிக் காட்டியுள்ளதாகவும்,*

*அதன்படி, சுமார் 40 லட்சம் கூடுதல் இயந்திரங்கள் தேவைப்படும் என்றும் தெரிவித்துள்ள அவர், இதற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை செலவிட வேண்டியிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.*

*மேலும், இத்திட்டத்தின் குறைபாடுகள் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிப்பது அவசியம் என்றும் எஸ்.ஒய். குரேஷி தெரிவித்துள்ளார்.*

### ‘மிச்செலின் இந்தியா’ நிறுவனம் ரூ.564 கோடியில் -

# சென்னையில் கார் டயர் தொழிற்சாலை!

## தமிழ்நாட்டில் தொழில் தொடங்கப் போட்டி போடும் பெரிய நிறுவனங்கள்!

*சென்னை, செப். 23-*

*சென்னை அருகே தேர்வாய் கண்டிகையில் 564 கோடி ரூபாய் முதலீட்டில் மிச்செலின் இந்தியா பிரீமியம் கார் டயர் தொழிற்சாலையை நிறுவ உள்ளது.*

*இதன் மூலம் 200 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கையின் மூலம் உலகின் பல முன்னணி நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடுகளைச் செய்து வருகின்றன.*

*தொழில் தொடங்க உகந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதால், தொழில் நிறுவனங்கள் போட்டி போடுகின்றன.*

*தற்போது மிச்செலின் இந்தியா பிரீமியம், கார் டயர் தொழிற்சாலையை சென்னை அருகே தேர்வாய் கண்டிகையில் 564 கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவ உள்ளது.*

*நாட்டில் பிரீமியம் டயர்களுக்கான தேவை அதிகரித்து வருவதால், இத்தொழிற்சாலை நிறுவப்படுகிறது. பிரான்சை தலைமையிடமாகக் கொண்ட உலகளாவிய டயர் நிறுவனமான மிச்செலின், இந்தியாவில் அதன் அடுத்த கட்ட உற்பத்தி விரிவாக்கமாக சென்னையில் தொடங்குகிறது.*

*நாடு முழுவதும் உள்ள ‘மிச்செலின் இந்தியா’ நிறுவனத்தில் 2 ஆயிரத்து 800 பேர் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது சென்னையிலும் நிறுவப்படுவதன் மூலம் கூடுதலாக 200 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.*